# தமிழ் கல்விநிலையம் – மவுண்றூயிட்

## Tamil Study Centre - Mount Druitt

Mobile: 0449 892 066

Email :mtdruitttsc@gmail.com Web : www.mtsc.org.au


செய்தி மடல் 2019 — 03 24-08-2019

**“தமிழே எம் தாய் மொழி”**. அத்தமிழை கற்றிட வந்திருக்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் அன்பான வணக்கங்கள். இச்செய்திமடல் மூலம் பின்வரும் விடயங்களை உங்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.




1. *கலை விழா 2019*

**எமது பாடசாலையின் வருடாந்த கலை விழா எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 28ம் திகதி (28.09.2019) சனிக்கிழமை அன்று மாலை. 5.00 மணிக்கு Erskine Park High School (82 Swallow Dr, Erskine Park NSW 2759) நடைபெறும்.** எனவே எமது அனைத்து மாணவர்களும் மாலை 4.45 மணிக்கு முன்னதாக சமூகமளித்து அனைத்து மாணவர்களும் பங்குபற்றும் முதல்நிகழ்ச்சி சிறப்புற நடைபெற ஒத்துழைப்பை வழங்கும் வண்ணம் தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். தவிர்க்கமுடியாத காரணத்தால் உரிய நேரத்திற்கு சமூகமளிக்க முடியாதவிடத்தில் உடனடியாக தங்களது வகுப்பு ஆசிரியரை தொடர்பு கொண்டு உங்களது நிகழ்ச்சி சிறப்புற நடைபெற ஒத்துழைப்பை வழங்கவும். அத்துடன் நீங்கள் அனைவரும் பாடசாலை வாகன தரிப்பிடத்தையும் பயன்படுத்தலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கலைவிழாவுக்கான பங்களிப்பாக பெற்றோர்களிடமிருந்து வருடத்திற்கு ஒரு குடும்பத்திற்கு $50ஐ எமது கல்வி நிலைய பொருளாளர் திரு.பே.மகேஸ்வரமூர்த்தி அவர்களிடம் செலுத்தி பாடசாலையின் வளர்ச்சிக்கு ஒத்துழைக்குமாறு தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**பெற்றோர் பங்களிப்புக்கான கட்டண விபரம்**

| | |
|---|---|
| One Student Family (When paid using cash / Creative Kids Voucher ) | $ 50.00 |
| Two Student’s Family (When paid using Creative Kids Voucher ) | $ 30.00 |
| Three or More Student’s Family (When paid using Creative Kids Voucher ) | $ 0.00 |

கலைவிழா அன்று உங்களுக்கு தேவையான இரவு உணவை நீங்கள் முன்கூட்டியே பாடசாலை நிர்வாகத்திடம் உரிய பணத்தை செலுத்தி உங்களுக்கான உணவு குறியை (*token*) பெற்றுக்கொள்ளுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் **கலை விழாவிற்கான ஒத்திகை முதல் நாள் வெள்ளிக்கிழமை (27.09.2019) மாலை 6.00 மணிக்கு Erskine Park High School (82 Swallow Dr, Erskine Park NSW 2759) பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்**. கலை விழா ஒத்திகையன்று பாடசாலை நிர்வாகம் அனைவருக்கும் இரவு உணவு வழங்க ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. இதற்கு தேவையான இரவு உணவுகளை வழங்க விரும்பும் பெற்றோர்கள் 25.09.2019 திகதிக்கு முன்னர் எமது உப செயலாளர் திரு. க. சுதாகரன் அவர்களைத் தொடர்புகொண்டு அவற்றை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

2. *பெற்றோர் கலந்துரையாடல்*

எதிர்வரும் **31.08.2019 சனிக்கிழமை அன்று பி.ப. 2.15 மணிக்கு** நடைபெற இருக்கும் பாடசாலை கலைவிழா பற்றிய முக்கிய கலந்துரையாடலுக்கு சகல பெற்றோர்களையும் சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

3. *பாடசாலை நேரம்* (மூன்றாம் தவணை மட்டும்)

பிள்ளைகளை பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு அனுப்பிவைக்குமாறும், பாடசாலை முடிவடையும்போது தாமதமாகாமல் வந்து அழைத்துச் செல்லுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| ஆரம்பமாகும் நேரம் : | பி.ப. 2.00 மணி |
| இடைவேளை : | பி.ப. 3.30ல் இருந்து பி.ப. 3.45 மணி வரை |
| முடிவடையும் நேரம் : | பி.ப. 5.00 மணி |

4. ***பெற்றோர் கொடுப்பனவு***

இதுவரை தங்கள் பங்களிப்பை செலுத்த தவறிய பெற்றோர்கள் இந்த ஆண்டிற்கான கட்டணத்தை செலுத்தி எமக்கு உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். இந்த வருடம் முதல் எமது பாடசாலை Creative Kids Registered Provider ஆக அங்கீகாரம் பெற்றுள்ளது என்பதை தங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். எனவே நீங்கள் Creative Kids Voucher மூலமும் எமது பாடசாலைக் கட்டணத்தை செலுத்தலாம். பெற்றோர் கொடுப்பனவை ஏற்கவே பணமாகக் செலுத்திய பெற்றோர்கள், திரும்பவும் Creative Kids Voucher மூலம் அவற்றை செலுத்தி தாங்கள் ஏற்கனவே செலுத்திய பணத்தை மீண்டும் திரும்ப பெற்றுக்கொள்ளலாம் என்பதை உங்களுக்கு அறியத்தர விரும்புகிறோம். மேலதிக விபரங்களுக்கு எமது கல்வி நிலைய பொருளாளர் திரு.பே.மகேஸ்வரமூர்த்தி அவர்களை தொடர்புகொள்ளவும்.

5. ***மாணவர் வரவு***

மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக வருகை தருவது அவர்களது கல்விக்கும், பாடசாலையின் வளர்ச்சிக்கும் மிகவும் முக்கியமானதாகும். அத்துடன் சமூகமொழிப் பாடசாலைகளிற்கு நியுசவுத்வேல்ஸ் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படும் மானியம் மாணவர்களின் வரவில் தங்கியுள்ளது. எனவே மாணவர்கள் தவறாமல் வருகைதரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

6. ***இணையத் தளம்*** *(Webpage)/* ***முகப் புத்தகம்***

எமது பாடசாலை இணையத் தளமான ***www.mtsc.org.au*** மற்றும் முகப்புத்தகம் தேவையான தகவல்ளைக் கொண்டதாக தரவேற்றப்பட்டு புதுப்பொழிவுடன் அனைவரும் பயன்பெறும் வகையில் பாடசாலையினால் பேணப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.

7. ***பேச்சுப்போட்டி***

எமது பாடசாலையின் வருடாந்த பேச்சுப்போட்டியில் பங்குபற்றி போட்டி சிறப்பாக நடைபெறுவதற்கு காரணமான மாணவர்களையும், ஆசிரியர்களையும் பாடசாலை நிர்வாகம் தனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றது. மாணவர்கள் திறமையாக மேடையில் பேசுவதற்கு பக்கபலமாக இருந்த பெற்றோர்களுக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும் பாடசாலை நிர்வாகம் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றது.

8. ***கலாநிதி இளங்கோ வேந்தனார் ஞாபகார்த்த புலமைப் பரீட்சை - 2019*** *(Federation Exam)*

தமிழ் பாடசாலைகளின் கூட்டமைப்பினால் வருடந்தோறும் நடாத்தப்படும் கலாநிதி இளங்கோ வேந்தனார் ஞாபகார்த்த புலமைப் பரீட்சையில் எமது பாடசாலையின் அனைத்து மாணவர்களும் இந்த வருடமும் பங்குபற்றி சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளார்கள். அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள். அத்துடன் அவர்களுக்கான பரீட்சை கட்டணத்தை இந்த வருடமும் பாடசாலையே செலுத்தியது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

9. ***சரஸ்வதி பூஜை*** **(வாணி விழா)**

**நான்காம் தவணை ஆரம்பமாகும் தினமான எதிர்வரும் 19.10.2019 அன்று எமது பாடசாலையில் சரஸ்வதி பூஜை (வாணி விழா) பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.** அனைவரும் எமது கலாச்சார உடையணிந்து வருகைதருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். அன்றைய தினம் உங்களின் பிள்ளைகள் குழுவாக தேவாரம், திருவாசகம் அல்லது சைவ சமயம் சம்பந்தமான பாடல்கள் படிக்கவிரும்பினாலோ அல்லது வேறு ஏதேனும் சங்கீதம் இசைக்க விரும்பினாலும் பெற்றோர்கள் உங்களது வகுப்பு ஆசிரியர்களை அல்லது ஆசிரியர்களான திருமதி.தயாழினி முரளிதரன (0434 284 538) – கீழ் வகுப்பு, திருமதி.செல்வராஜி இரங்கநாதன் (0469 427 599) – மேல் வகுப்பு அவர்களை தொடர்பு கொண்டு தயார்செய்து அழைத்துவரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

அன்றைய தினம் வழமைபோல் பெற்றோர்களினால் கொண்டுவரப்பட்ட பிரசாதங்கள் பூஜை முடிந்தபிறகு அனைவருக்கும் வழங்கப்பட்டு சரஸ்வதி பூஜை நிகழ்ச்சி இனிதே நிறைவுபெறும்.

10. ***பாடசாலைவிடுமுறை***

எமது பாடசாலையின் **தவணை மூன்று எதிர்வரும் 28.09.2019** அன்றுடன் முடிவடைந்து **நான்காம் தவணை வருகின்ற 19.10.2019** அன்று ஆரம்பமாகும் என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.





" முதலான நந்தமிழை

இகழ்த லின்றிக்

கற்கண்டாய் நினைத்தின்பம்

கைக்கொண்டு வாழ்ந்திடுவீர்

நன்றே என்றும் ! " – **கவிஞர் பாரதிதாசன்.**